முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1022

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.07.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானவேலி கொண்ட அரங்கனே
ஞானபலம் கொண்ட தேசிகனே
தானதர்ம சக்தி கூட்டியே
தரணியை காக்க வந்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 01 நாள், 17.07.2022 ஞாயிற்றுக்கிழமை)
வரங்களாக நித்தம் உன் சக்தி
வையகத்தில் நிலை கூடி வருதல் காண
3. காணவே அரங்கன் பேர் சொல்லும் இடமெல்லாம்
கலியுகத்தில் தர்மபலமாக மாறும்
மாறுதலைத்தரும் அரங்கன் உண்மை சன்மார்க்கம் மக்களால் ஏற்கப்பட இனிதே
ஆறுதலாக இந்த உலகில் அனைத்து இன்னல்களும் அகன்றோடி பாதுகாப்பாக மாறும்
4. மாறுதலும் மகா சக்தி மிகு
மாதவசி அரங்கன் ஆறுதலும்
உலகோர்க்கு எல்லா சித்தியும் தந்தருளும்
அருளவே அரங்கனை நோக்கி
5. ஆற்றல்கூட்டி ஆறுமுகன் யான்
பேர் அற்புதம் நிகழ்த்தி வர
மாற்றமென மக்கள் எண்ணினால் போதும்
மறுகணமே அந்த அற்புதம் நடந்தேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–